# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1987 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, மாநகர சபைகள் (திருத்தச்) சட்டம்

---

*[1987, ஏப்பிறல் மாதம் 16 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---


*1987, ஏப்பிறல் மாதம் 16 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது**

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 | தபாற் செலவு : சதம் 75

# 1987 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, மாநகர சபைகள் (திருத்தச்) சட்டம்

[1987 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 16 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச.வ.ஒ 14/86
1807

**மாநகரசபைகள் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

1. இச்சட்டம் 1987 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, மாநகர சபைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) மாநகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 40 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— 252 ஆம் அத்தியாயத்தின் 40 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அவ் உட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்னர் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம் :—

"(ஓஓ) எந்த திருவாக மாவட்ட எல்லையினுள் மாநகரசபை அமைந்துள்ளதோ அந்த நிருவாக மாவட்டத்திற்கென அமைக்கப்பட்ட அபிவிருத்திச் சபையினால் அதற்குக் கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை, அல்லது பணியைப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் ; அத்துடன் அத்தகைய அபிவிருத்திச் சபையினால் செயற்படுத்துவதற்கென அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் வேலையை அல்லது செயற்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கும் ;";

(ஆ) அவ்வுட்பிரிவின் (ண) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்னர் பின்வரும் பந்திகளை உட்புகுத்துவதன் மூலம் :—

(ணண) மாநகரசபைப் பிரதேசத்தில் வசிப்பவர்களுக்கு வேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைப்பதற்கு" ;

(ணணண) (i) மாநகரசபைப் பிரதேசத்தினுள் கட்டடங்கள், தளபாடங்கள், விளையாட்டு மைதானம், விடுதிகள், ஆசிரியர் குடிமனைகள், விளையாட்டுப் பொருட்கள், நூல்நிலைய வசதிகள் போன்ற கல்வி வசதிகளின் ஏற்பாட்டிற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றைத் தயாரித்துத் தோதான அதிகாரியிடம் சமர்ப்பிப்பதற்கும் ;

(ii) மாநகரசபைப் பிரதேசத்தினுள் பாடசாலைகளை ஆரம்பித்தல், மூடுதல், ஒருங்கிணைத்தல், அவற்றுக்குப் பெயரிடுதல், அவற்றைத் தரமுயர்த்தல் என்பனபற்றித் தோதான அதிகாரிக்கு விதந்துரைத்தல்.

3. முதன்மைச்சட்டவாக்கத்தின் 188 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 188 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அவ்வுட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் :—

"(ஒ) மகப்பேற்று, பிள்ளை நலன் சேவைகளைத் தாபித்தலிலும், சுகாதாரக் கல்விக்கு ஏற்பாடு செய்வதிலும், ஆரம்ப சுகாதாரக் கண்காணிப்பு நிலையங்களையும் சனசமூக அபி

விருத்திக் கருத்திட்டங்களையும் பேணுதலிலும், சபையினால் தாபிக்கப்பட்ட ஏதேனும் மகப்பேற்றுச் சேவைகளின் நோக்கங்களுக்காக மருத்துவிச்சிகளைப் பயிற்றுவித்தலிலும், மழையினால், வெள்ளத்தினால், நெருப்பினால், பூகம்பத்தினால், புயலினால், பஞ்சத்தினால், அல்லது கொள்ளை நோய்களினால் ஏற்படும் துயர் நிவாரணத்திற்கான அறக் கொடைகளில் அல்லது நடவடிக்கைகளில் சபைக்கு ஏற்படும் எல்லாச் செலவுகளும்";

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஒ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம் :—

"(ஒஒ) சமயச் சடங்குகளையும் விழாக்களையும் ஒழுங்கமைப்பதற்கும் தர்ம பாடசாலைகளையும் சாசன, ரக்ஷக மண்டலங்களையும் பேணுவதற்கும் கலாச்சார நிலையங்களைத் தாபித்தற்கும் இலக்கிய, கலாச்சார விழாக்களை ஒழுங்கமைப்பதற்கும், இலக்கிய கலாச்சாரப் பெறுமதி வாய்ந்த நூல்களை வெளியிடுவதற்கும் கலைஞர்களுக்கும் நூலாசிரியர்களுக்கும் கைப்பணியாளருக்கும் பரிசுகள் வழங்குதற்கும் ஆன செலவு தொகைக்கான உதவுதொகைகள் உட்பட சமய, கலாசார முன்னேற்றத்திற்கென சபையால் வாக்களிக்கப்பட்ட எல்லா உதவுதொகைகளும்;"; அத்துடன்

(இ) அவ்வுட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியில் "வறியோர் நிவாரணத்திற்கு அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வறியோர் நிவாரணத்திற்கு, ஆதரவற்ற ஆட்களுக்கு அல்லது உடல் உள ஊனமுற்றோர்க்கு அல்லது சமூகச் சமவாய்ப்பற்ற ஆட்களுக்கு புனர்வாழ்வழித்தலும் கவனித்தலும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம்;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 272 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 272 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் (11) ஆம் பந்தியை நீக்கம் செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் :—

"(11) கால்நடைகளுக்கான நோய்த்தடுப்பு நிலையங்களைப் பேணலும் ஒழுங்குபடுத்தலும், அவை வதிவதற்கான கட்டணங்களை அறவிடுதலும், பண்ணை விலங்குகளிற்கும் நாய்களுக்கும் அம்மைப்பால் குத்தலுக்கும் நோய்த்தடுப்புச் செய்வதற்குமான வசதிகளுக்கு ஏற்பாடு செய்தலும் ;";

(ஆ) அப்பிரிவின் (29) ஆம் பந்தியில் "மீன்பிடித்தலைத் தடைசெய்தல்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக "மீன்பிடித்தலைத் தடைசெய்தலும் கரையோர மீன்பிடித்தலுக்கான தடையை அகற்றுதலும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம்; அத்துடன்

(இ) (30அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம் :—

"(30ஆ) கைத்தொழில் கழிவை ஒழுங்கு படுத்துதலும் கட்டுப்படுத்துதலும்".